**சார்பு நீதிமன்றம், பொள்ளாச்சி**

மனு எண். எம்.சி.ஓ.பி. 163/2017

PW - 2

2025 ம் ஆண்டு ஆக்ஸ்ட் திங்கள் 08 ம் நாள் வெள்ளிக்கிழமை (1989 ம் ஆண்டின் 44 வது சட்டத்தின் ஏற்பாட்டின்படி) திரு.எம்.மணிகண்டன், எம்.ஏ., எம்.எல்., சார்பு நீதிபதி, பொள்ளாச்சி அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்து வைக்கப்பட்டது.

| | |
|---|---|
| பெயர் | குமார் |
| க.பெ. (அ) த.பெ. | கிருஷ்ணசாமி |
| வயது | 46 |
| முகவரி | மலேரிபாளையம், கோயமுத்தூர் |

**முதல் விசாரணை**

நான் இம்மனுவில் மனுதாரரர் தரப்பு சாட்சி ஆவேன். எனது தரப்பு சாட்சியத்தை நான் சத்தியப்பிரமாணமாக தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான்.

என்னுடைய பிரமாண வாக்குமூலத்தை ஏற்றுக் கொள்ள வேண்டுகிறேன்.

மசாஆ - 19 எனது ஆதார் அட்டை நகல் (அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது)

**குறுக்கு விசாரணை**

நான் தான் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன் என்றால் சரிதான். நான் இறந்து போன லோகநாதனின் ஊரைச் சார்ந்தவரா என்றால் இல்லை. ஆம்புலன்ஸ் பொள்ளாச்சியிலிருந்து கோவை நோக்கி வந்தது என்று சொன்னால் சரிதான்.

விபத்து சமயத்தில் பாலம் வேலை நடந்து கொண்டிருந்தது என்றும், ஆம்புலன்ஸ் ஆனது மேல்புறம் சென்றது என்று சொன்னால் அது சரியல்ல, விபத்து சமயத்தில் பாலம் வேலை எதுவும் நடக்கவில்லை. பாலத்திற்கு கிழபுறம் தான் இறந்துபோன நபர் இருசக்கர வாகனத்தை ஓட்டி வந்திருக்க வேண்டும் என்றும், மேல்புறம் ஒரு வழிப் பாதையில் சென்றதால் தான் விபத்து நடந்தது என்று சொன்னால் அது சரியல்ல. இறந்து போன நபரின் அஜாக்கரதையால் விபத்து நடந்தது என்றும், இறந்து போன நபர் எனக்கு நண்பர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

இச்சாட்சியம் என் முன்பு நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அது சரி என்று அவரால் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

சார்பு நீதிபதி
பொள்ளாச்சி